Reg. No. : ....................................

**Code No. : 10782** **Sub. Code : EMTA 12**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2023

First Semester

Tamil — Core

நன்னூல் – எழுத்து

(For those who joined in July 2023 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையை எழுதுக.

1. விவரிக்கப்படுகிற கருத்தை முழுமையாக அடக்கிப் பொதுப்படக் கூறுவது ————
   (அ) தொகைச் சூத்திரம் (ஆ) பிண்டச் சூத்திரம்
   (இ) வகைச் சூத்திரம் (ஈ) குறிச்சூத்திரம்

2. நூலின் குற்றம், எத்தனை வகைப்படும்?
   (அ) 11 (ஆ) 12
   (இ) 13 (ஈ) 10

3. 'பறவை' – என்பது
   (அ) இடுகுறிப் பொதுப்பெயர்
   (ஆ) காரணப் பொதுப்பெயர்
   (இ) காரணச் சிறப்புப் பெயர்
   (ஈ) இடுகுறிச் சிறப்புப் பெயர்

4. உயிரளபெடை எத்தனை மாத்திரை?

(அ) 1 (ஆ) 3

(இ) 1/2 (ஈ) 1/4

5. இறந்தகால இடைநிலைகள்

(அ) ப், வ்

(ஆ) த், ட், ற், இன்

(இ) ஆநின்று, இன்று, கிறு

(ஈ) ஆல், ஆன்

6. பகுபத உறுப்புகள் மொத்தம்

(அ) 6 (ஆ) 5

(இ) 4 (ஈ) 7

7. வாழை + பழம் = வாழைப்பழம் - எவ்வகை விகாரப்புணர்ச்சி?

(அ) தோன்றல் (ஆ) திரிதல்

(இ) கெடுதல் (ஈ) அனைத்தும் சரி

8. சுவைப்புளி முன் இன மென்மையும் ————

(அ) திரியும் (ஆ) கெடும்

(இ) தோன்றும் (ஈ) இயல்பாகும்

9. சாரியை எத்தனை வகைப்படும்.

(அ) 10 (ஆ) 17

(இ) 12 (ஈ) 13



10. 'ஆ' – என்பதன் பொருள்.

(அ) பசு (ஆ) விலங்கு

(இ) மன்னன் (ஈ) சோலை

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடையளி.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) உரையின் பொது இலக்கணம் - விளக்குக.

(அல்லது)

(ஆ) மாணாக்கர் இலக்கணத்தைத் தொகுத்து எழுதுக.

12. (அ) ஒற்றளபெடை பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களின் பொதுப் பிறப்பினை எழுதுக.

13. (அ) பண்புப் பெயர்ப் விகுதிகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) காலம் காட்டும் விகுதிகள் பற்றி எழுதுக.

14. (அ) தொண்ணூறு, தொள்ளாயிரம் - விளக்குக.

(அல்லது)

(ஆ) மரப்பெயர்ப் புணர்ச்சி - விளக்குக.

15. (அ) மகர இறுதிப் புணர்ச்சியை - விளக்குக.

(அல்லது)

(ஆ) 'இரண்டாம் வேற்றுமைத் திரிபுகள்' குறித்து எழுதுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளி.

(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) சூத்திரம் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நூலைக்கற்கும் முறையை தொகுத்து எழுதுக.

17. (அ) மெய்ம்மயக்கம் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) போலி எழுத்துக்களை விவரி.

18. (அ) பகுதிகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இடைநிலை என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

19. (அ) புணர்ச்சி என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உயிர் முன் உயிர் புணர்தல் விளக்குக.

20. (அ) லகர, ளகர இறுதிப் புணர்ச்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) உருபு புணரியில் செய்தியைத் தொகுத்து எழுதுக.

———————